செ.வெ.எண்: 786/2020 நாள்: 18.11.2020

**கன்னியாகுமரி மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை காலம் நெருங்குவதால், பல்வேறு துறைகள் மூலம் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள் விரைந்து முடித்திட வேண்டும் - மாவட்ட அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், மாதந்தோறும் பல்வேறு துறைகள் மூலம் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள், முன்னேற்றம் குறித்த, மாவட்ட அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெறும். அதனைத்தொடர்ந்து, பல்வேறு துறைகள் மூலம் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள், முன்னேற்றம் குறித்த, மாவட்ட அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.11.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்திலுள்ள அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுடன், பல்வேறு துறைகள் வாயிலாக நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்கள். முந்தைய ஆலோசனை கூட்டத்தில், துறை சார்ந்த அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட வளர்ச்சிப்பணிகள் குறித்து தனித்தனியே கேட்டறிந்து, அதை செயல்படுத்துவதில் இடையூறுகள் இருப்பின் அதற்கான மாற்று ஆலோசனைகளை வழங்கி, வளர்ச்சிப்பணிகளை விரைந்து முடிக்கவும், தரமானதாகவும் இருக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். தொடர்ந்து, வளர்ச்சித் திட்ட பணிகள் தொடர்பாக நிலுவையிலுள்ள அனைத்து பணிகளையும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற விதி 110-ன் கீழ் அறிவித்த அனைத்து திட்டங்களையும், விரைந்து முடிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். ஊரக வளர்ச்சித்துறையின் சார்பாக, மலைக்கிராமங்களில் நடைபெறவுள்ள சாலைப்பணிகளுக்கு, வனத்துறையினர் மூலம் உரிய அனுமதி பெற்று விரைவில் பணிகளை துவங்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

வடகிழக்கு பருவமழை நெருங்குவதால், மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் சாலை ஓரங்களில் ஆபத்தான நிலையிலுள்ள மின்கம்பங்ளை மாற்றி, புதிய மின்கம்பங்கள் அமைத்தும், இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி, தடையின்றி மின்சாரம் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள். நெடுஞ்சாலைத்துறை சார்பாக, அனைத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி வாயிலாக நடைபெற்று வரும், சாலைப்பணிகளை விரைந்து முடித்திடவும், பழுதான சாலைகளை போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூரின்றி விரைந்து பழுதுகள் நீக்கி சரிசெய்ய சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள். மேலும், பொதுப்பணித்துறை ( நீர் வள ஆதாரம்) அலுவலர்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து அணைகளின் நீர் மட்டங்களையும், அணைகளுக்கு வரும் நீரின் அளவினையும் கண்காணித்து, தாழ்வான பகுதிகளிலும், கரையோர பகுதிகளிலும் வசிக்கும் பொதுமக்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படாதவாறு அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தும், அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்துக்கொடுக்கவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மாநகராட்சி சார்பாக செயல்படுத்திவரும், கூட்டுகுடிநீர் திட்டங்கள், பாதாள சாக்கடை பணிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அனைத்து திட்டப்பணிகள் உள்ளிட்ட பணிகளை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் விரைந்து முடித்திடவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும், அனைத்துத்துறை வாயிலாக மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும், வளர்ச்சித்திட்ட பணிகளை செயல்படுத்துவதில் இடையூறு ஏதும் இருந்தால், மாவட்ட ஆட்சித்தலைவர் கவனத்திற்கு எடுத்து சென்று, திட்டமிட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்று, டெங்கு உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கையாக ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி பகுதிகளில், தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அனைத்துத்துறை அலுவலர்களும், பணியாளர்களும், அந்தந்த பகுதிகளில் செயல்படுத்த வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கிருமிநாசினிகள் தெளித்தும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். களப்பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு முககவசங்கள், கையுறைகள் வழங்கி பாதுகாப்பான முறையில் பணி செய்வதை உறுதி செய்திடவும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தேவையான அளவு மருந்துகள் உள்ளிட்டவைகள் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி.ஐ.எஸ்.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலரும், அரசு ரப்பர் கழக பொதுமேலாளர்(பொ) திரு.அசோக்குமார் இ.வ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மா.வீராசாமி, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை (நீர்வளம், கட்டிடம், மின்சாரம்), குடிநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம், தேசிய நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் அனைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.